**16.02.2020**

**பத்திரிக்கை செய்தி**

**மெட்ரோ இரயில் நிலையங்களில் இன்று (16.02.2020) கலை மற்றும் இசை நிகழ்ச்சி நடைபெற்றது**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதன் ஒரு பகுதியாக, சென்னை முழுவதும் உள்ள பல்வேறு இசைக் கலைஞர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து சென்னை மக்களுக்கு தமிழ் கலாச்சாரத்தின் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஸ்ரீ சத்ய சாய் சேவா அமைப்புடன் இணைந்து இன்று (16.02.2020) 'பாலா விகாஸ் நாடகம்' - இது பாலா விகாஸின் மாணவர்களால் நடைபெற்றது. இந்த நாடகம், சமூக விழிப்புணர்வு மற்றும் ஒரு குடிமகனின் பொறுப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் வகையில் இருந்தது. இந்நிகழ்ச்சி வடபழனி மெட்ரோ இரயில் நிலையத்தில் மாலை 4 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து – சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) மாலை 6:30 மணி முதல் இரவு 8:30 மணி வரை "ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை" , கலைக்குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் அவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்து இந்நிகழ்ச்சியினை கண்டு களித்தனர்.